DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, RAMANATHAPURAM

**C.C.No. 292/2007**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW12 | | | |
| Name | : | சிவக்குமார் | Age | : | 46 |
| S/o | : | கோபால் | Occupation | : | காவல் ஆய்வாளர் |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 22nd day of August 2025.

**22.08.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலைய குற்ற எண். 05/2003 பிரிவுகள் 409, 420, 477A IPC வழக்கை ஆய்வாளர் தங்கராஜ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்துள்ளார். பின்பு அவருக்கு பின்னால் காவல் ஆய்வாளர் ராஜா மேலும் புலன்விசாரணை செய்துள்ளார். அவர்கள் இருவரும் தற்போது இறந்துவிட்டார்கள். கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 31.03.2003ம் தேதி இராமநாதபுர மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக தங்கராஜ் என்பவர் பொறுப்பில் இருந்த போது மாவட்ட குற்றப்பிரிவு நடப்பு கடித எண். 20/DCB/Rmd/22.03.2003ன் பிரகாரம் வரப்பெற்ற மனுவினை விசாரணை செய்து மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண். 05/2003 பிரிவுகள் 409, 420, 477A IPC வழக்கை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையும், புகாரையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 31.03.2003ம் தேதி 15.00 மணிக்கு 1வது எதிரி செந்தில்குமாரை கைது செய்து விசாரணை செய்த போது தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் மாரிமுத்து, கருப்பையா ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி குடிசை வீட்டின் அறையில் பீரோவில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ. 25,000/-த்தை கைப்பற்றி அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்துள்ளார். **(ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக அரசு தரப்பு வேண்டுகோளின் படி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

SUJITH

Digitally signed by SUJITH
Location: Ramanathapuram
Date: 2025.08.22 14:43:00 +0530